**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.250/2026,**

**Tirupathur Town Police Station**

**Cr.No.4/2025**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW1 |
| 2 | Name | : | பெருமாள் |
| 3 | Father/Husband Name | : | ராஜீ |
| 4 | Village | : | கலைஞர் நகர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | விவசாயம் |
| 7 | Age | : | 63 |
| 8 | List of witness | : | Lw1 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.03.2026

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.00 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 01.05 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த நபர் அரவிந்தன் என்னுடைய இளைய மகன். கடந்த 01.04.2025 அன்று காலை 08.30 மணியளவில் என்னுடைய மகன் சிற்றுண்டி சாப்பிட்டு வருவதற்காக சென்றார். TMC காலனி குளத்து பக்கம் அருகே சாலையை கடக்க முயன்ற போது வாகன விபத்தில் இறந்து விட்டார். என் மகனின் மீது மோதிய வாகனம் குறித்தும் அந்த வாகனத்தை ஓட்டிய நபர் குறித்தும் எனக்கு தெரியாது. நான் அவற்றை பார்க்கவில்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார். புகார் மனு **<u>அ.த.சா.ஆ.1.</u>** வழக்கு குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

புகாரில் உள்ள சங்கதிகள் குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது கையெழுத்து மட்டும் தான் நீங்கள் போட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் வாகனம் குறித்த அடையாளம் தெரியாது என்று தான் சொன்னீர்கள் என்றால் சரிதான். உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் விபத்து குறித்து கேள்விப்பட்ட சங்கதி என்றால் சரிதான்.

**சாட்சிகள் நளினி, தீபா, சுகந்தி மற்றும் சந்தோஷ் ஆகியோர்களுக்கும் விபத்து குறித்து கேள்விப்பட்ட சங்கதி என்றால் சரிதான்.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.03.24 17:22:20 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.250/2026,**

**Tirupathur Town Police Station**

**Cr.No.4/2025**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW2 |
| 2 | Name | : | நளினி |
| 3 | Father/Husband Name | : | வேடி |
| 4 | Village | : | பெரியார் நகர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | துப்புறவு பணியாளர் |
| 7 | Age | : | 37 |
| 8 | List of witness | : | Lw2 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.03.2026

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –01.10 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.17 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த அரவிந்த் என்னுடைய உடன் பிறந்த இளைய சகோதரர். கடந்த 04.01.2026 அன்று காலை 08.00 மணிக்கு TMC காலனி அருகே சாலையை கடக்கும்போது என் தம்பியின் மீது இருசக்கர வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்படுத்தியது. என் தம்பியின் மீது மோதியது இருசக்கர வாகனம் ஆகும் அந்த வாகனம் குறித்து எனக்கு விவரம் தெரியாது. விபத்து நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இல்லை. வேலை செய்து கொண்டிருந்தேன். சம்பவ இடத்திற்கு பதினைந்து நிமிடத்திற்குள் வந்தேன். அப்போது காயம்பட்ட என் தம்பியை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி அந்த இடத்தில் இருந்தார். திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு என் தம்பியை அழைத்துச்சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து 11.00 மணிக்கு என் தம்பியை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். தருமபுரி அரசு மருத்துவமனையில் என் தம்பி அபாய கட்டத்தில் இருப்பதாக சொல்லி சேலம் மருத்துவமனைக்கு அங்கிருந்து அழைத்துச்சொன்றோம். சேலம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற என் தம்பி இரண்டே நாளில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

விபத்து நடந்த பதினைந்து நிமிடம் கழித்து வந்த காரணத்தினால் விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.03.24 17:22:29 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.250/2026,**

**Tirupathur Town Police Station**

**Cr.No.4/2025**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW3 |
| 2 | Name | : | தீபா |
| 3 | Father/Husband Name | : | சந்தோஷ் |
| 4 | Village | : | கலைஞர் நகர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | கூலி |
| 7 | Age | : | 33 |
| 8 | List of witness | : | Lw3 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.03.2026

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.18 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.24 P.M.

முதல் விசாரணை:—

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த அரவிந்த் என்னுடைய மைத்துனர். கடந்த 04.01.2025 அன்று காலை 08.00 முதல் 08.45 மணிக்கு TMC காலனி குளத்து அருகே என் மைத்துனருக்கு விபத்து ஏற்பட்டதாக நான் வீட்டிலிருக்கும்போது எனக்கு ஒருவர் தகவல் சொன்னார். விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்து எனக்கு விவரம் தெரியாது. விபத்து நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இல்லை. சம்பவ இடத்திற்கு பத்து நிமிடத்திற்குள் வந்தேன். அப்போது காயம்பட்ட என் மைத்துனரை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு என் மைத்துனரை அழைத்துச்சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து 11.00 மணிக்கு என் மைத்துனரை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். தருமபுரி அரசு மருத்துவமனையில் என் மைத்துனரை அபாய கட்டத்தில் இருப்பதாக சொல்லி சேலம் மருத்துவமனைக்கு அங்கிருந்து அழைத்துச்சொன்றோம். சேலம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற என் மைத்துனரை ஒன்றரை நாளில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.03.24 17:22:36 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.250/2026,**

**Tirupathur Town Police Station**

**Cr.No.4/2025**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW4 |
| 2 | Name | : | சுகந்தி |
| 3 | Father/Husband Name | : | அறிவழகன் |
| 4 | Village | : | கலைஞர் நகர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | கூலி |
| 7 | Age | : | 26 |
| 8 | List of witness | : | Lw4 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.03.2026

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.25 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.30 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த அரவிந்த் என்னுடைய கணவர். கடந்த 04.01.2025 அன்று காலை 08.30 மணிக்கு பேருந்து டிப்போ அருகே என் கணவர் வேலை முடித்து சாப்பிடுவதற்காக வந்தார். சிவக்குமார் என்பவர் வாகனம் ஓட்டி என் கணவரை இடித்துவிட்டதாக என் தம்பி சொன்னார். என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக நான் வீட்டிலிருக்கும்போது எனக்கு தம்பி தகவல் சொன்னார். விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்து எனக்கு விவரம் தெரியாது. விபத்து நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இல்லை. சம்பவ இடத்திற்கு முப்பது நிமிடம் கழித்து வந்தேன். அப்போது காயம்பட்ட என் கணவரை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு என் கணவரை அழைத்துச்சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து 11.00 மணிக்கு என் கணவரை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். தருமபுரி அரசு மருத்துவமனையில் என் கணவரை அபாய கட்டத்தில் இருப்பதாக சொல்லி சேலம் மருத்துவமனைக்கு அங்கிருந்து அழைத்துச்சொன்றோம். சேலம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற என் கணவரை ஒன்றரை நாளில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரி தான் சிவக்குமார். வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்காத காரணத்தினால் எவ்வாறு ஏற்பட்டது என்பது உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.03.24 17:22:43 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.250/2026,**

**Tirupathur Town Police Station**

**Cr.No.4/2025**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW5 |
| 2 | Name | : | அஜீத் |
| 3 | Father/Husband Name | : | மயில் |
| 4 | Village | : | கலைஞர் நகர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | கூலி |
| 7 | Age | : | 24 |
| 8 | List of witness | : | Lw7 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.03.2026

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.31 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.40 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த அரவிந்த் என்னுடைய அக்காவின் கணவர். கடந்த 04.01.2025 அன்று காலை 08.00 முதல் 08.30 மணிக்கு TMC காலனி ரோட்டின் அருகே என் மாமா சாப்பிடுவதற்காக சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டது. நான் அப்போது சாலை ஓரத்தில் நின்றுகொண்டிருந்தேன். என் மாமாவிற்கு விபத்து ஏற்பட்டதை பார்த்தவுடன் சம்பவ இடத்திற்கு ஓடினேன். என் மாமாவிற்கு அடிப்பட்டவுடன் ஆட்டோவில் அரசு மருத்துவனைக்கு ஏற்றிச்சென்றோம். திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு என் மாமாவை அழைத்துச்சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து 11.00 மணிக்கு என் மாமாவை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். தருமபுரி அரசு மருத்துவமனையில் என் மாமா அபாய கட்டத்தில் இருப்பதாக சொல்லி சேலம் மருத்துவமனைக்கு அங்கிருந்து அழைத்துச்சொன்றோம். சேலம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற என் மாமா மூன்று நாளில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இறந்த என் மாமாவின் உடலின் மீது போலீசார் பிரேத விசாரணை நடத்தியதில் நானும் உடனிருந்தேன். வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

வழக்கு குறித்து போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். உங்களை எங்கு வைத்த விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த இடத்தில் விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொல்லியதை

போல தான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். விபத்து குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்றால் TMC காலனி பசங்க சொன்னார்கள். விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் நான் பார்த்தேன் இருசக்கர வாகனம் உடனடியாக கிளம்பிவிட்டது. இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள். இறந்த நபர் உங்களுடைய மாமா என்ற காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.03.24 17:22:51 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.250/2026,**

**Tirupathur Town Police Station**

**Cr.No.4/2025**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW6 |
| 2 | Name | : | கோவிந்தன் |
| 3 | Father/Husband Name | : | தீர்த்தன் |
| 4 | Village | : | ரெட்டியூர் |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | கூலி |
| 7 | Age | : | 62 |
| 8 | List of witness | : | Lw6 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.03.2026

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.43 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.50 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்த அரவிந்த் என்னுடைய தங்கையின் மகன். எனக்கு விபத்து குறித்து ஒன்றும் தெரியாது. இறந்த என் தங்கையின் மகன் உடலின் மீது போலீசார் பிரேத விசாரணை நடத்தியதில் நானும் உடனிருந்தேன். வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விபத்து குறித்து உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.03.24 17:22:58 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.